


# எழுப்புதல் தொனி
EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-


# சிலுவைக்குப் பின்னால்!


மலர்: 19 | Volume: 19 மார்ச் 2024 | March 2024 இதழ்: 11 | Issue: 11





ஒடிசா மாநிலம் கோராபுட் மாவட்டம் லம்டாபுட் பணித்தளத்தில்
நடைபெற்ற சுவிசேஷப் பணி



# உங்கள் சகோதரனிடமிருந்து...



இருளைப் போக்கும் ஒளியாக உலகில் உதித்து மனுக்குலத்தை மீட்க ஜீவனைக் கொடுத்த இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.

பிரியமானவர்களுக்கு, நீங்கள் கர்த்தருக்குள் சுகமாயிருப்பீர்கள் என்று முழு நிச்சயமாக நம்புகிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினாலும் இரக்கத்தினாலும் பல தடைகளைக் கடந்து பத்திரிகை மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நீங்களும் உங்கள் கண்மணிப்பிள்ளைகளும் எல்லாவிதமான ஆசீர்வாதத்தோடும், சுகத்தோடும், பாதுகாப்போடும் இருக்க தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறாரே. ஆனபடியினாலே நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகி கிறிஸ்துவைப் பற்றும் அறிவிலே தேறினவர்களாக ஜெபத்திலும், வேத தியானத்திலும் இடைவிடாமல் தரித்திருங்கள்.

நீங்கள் இயேசுவோடு கொண்டுள்ள உறவில் கபடற்றவர்களாய், குற்றமில்லாதவர்களாய் காணப்படும்போது சமாதானத்தின் தேவன்தாமே சாத்தானை உங்கள் காலின் கீழே நசுக்கிப் போடுவார். நீங்கள் எப்படிப்பட்ட உபத்திரவத்திற்குள்ளாக கடந்து சென்றாலும் அவர் (இயேசு) நம்மில் அன்பு கூறுகிறதினாலே முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமே. தற்போது நம்முடைய தேசத்தினுடைய சூழ்நிலை சுவிசேஷத்திற்கு எதிராக காணப்பட்டாலும் நமது மிஷனெரிகள் உங்கள் ஜெபத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் தைரியங்கொண்டவர்களாக தேவ பெலத்தோடு தீவிரமாய் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறார்கள். சுவிசேஷத்தின் நிமித்தமாக எங்களோடு தோள் கொடுத்து ஜெபத்தினாலும் பொருளினாலும் தாங்கி வருகிற உங்களை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதமுள்ளவரல்லவே.

இப்படியிருக்க நீங்கள் எல்லாவித தைரியத்தோடும் விசுவாசத்தோடும் உங்களுக்காகவும், எங்களுக்காகவும் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள். ஏனென்றால் நம்முடைய இரட்சகராய் இருக்கிற இயேசு கிறிஸ்து நம்மை மீட்கும்படியாக சீக்கிரத்திலே வரப்போகிறார்.

உங்கள் ஜெபங்களில் நமது மிஷனெரிகளை நினைத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுக்காக நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவ கிருபையும் சமாதானமும் உங்களில் அதிகமாய்ப் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

**(T.ஆசீர் ஞானராஜ்)**

**24 மணி நேர ஜெப உதவிக்காக:**
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 96294 99532**
Email: calvarygospelmm@gmail.com

**வங்கியில் பணம் அனுப்புவோர்,**
**96294 99532**
**எண்ணில் தெரிவிக்கவும்**

Follow us youtube channel:
**Voice of Revival Media** (or)



# சிலுவைக்குப் பின்னால்!

**கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்;
நான் எதிர்க்கவுமில்லை, நான் பின் வாங்கவுமில்லை.
அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப்
பிடுங்குகிறவர்கக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்;
அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை
மறைக்கவில்லை. – ஏசாயா 50:5,6**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசு சிலுவையிலே உங்களுக்காக எனக்காக உண்டாக்கின இரட்சிப்புக்கு பின்னால் மிகப்பெரிய தியாகம் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. இரட்சிப்பு என்பது சாதாரணமான காரியமல்ல. இன்று நாம் அவருடைய இரத்தத்தினாலே கழுவப்பட்டு அவருடைய பிள்ளைகளாக இருப்பதற்கு பின்னாக இயேசு செய்த தியாகத்தை வார்த்தையினாலே சொல்லி முடியாது. பிதாவாகிய தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைத்த தரிசனத்தை திட்டத்தை நிறைவேற்றுவதிலே அவர் பின்வாங்கவில்லை.

அடுத்தபடியாக அவர் அதைக் குறித்து மாறுபாடாக சிந்திக்கவும் இல்லை. அவர் என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்தார். அது ஒரு கடினமான காரியம். சிலுவைக்கு போவது என்பது லேசான காரியமல்ல. ஆண்டவர் இயேசு சிலுவைக்கு போவதற்கு முன்பாகவே

அவருடைய இருதயம் ஏராளமான வேதனைகள் நிறைந்ததாய் இருந்தது. காரணம் எந்த ஜனங்கள் எருசலேமுக்குள்ளே அவர் வரும்போது ஓசன்னா ஓசன்னா என்று வரவேற்றார்களோ அதே ஜனங்கள் இவரை சிலுவையிலே அறைந்து கொல்ல வேண்டுமென்று போராடுவார்கள். யாரெல்லாம் நன்மைகளைப் பெற்றார்களோ அவர்களுடைய நாவெல்லாம் ஆண்டவருக்கு விரோதமாய் தூஷிக்கும்.

இதையெல்லாம் அவர் இருதயத்திலே உணர்ந்திருந்தார். அவர் எருசலேமுக்குள்ளே வரும்போது ஒரு கூட்டத்தாரோடு கூட அவர் வந்தார். அவருக்குப் பின்னாக இருந்து ஊழியம் செய்யக் கூடிய ஸ்திரீகள், அவருடைய சீஷர்கள் என்று ஒரு கூட்டம் பேரோடு கூட எருசலேமுக்குள்ளே அவர் வந்தார். ஆனால் இயேசு சிலுவைக்கு போகும்போது அவர் தனித்தவராக கடந்து சென்றார். ஒரு தனி நபராக அவர் போராடினார். **அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப்பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். *– லூக்கா 23:49*** தனித்த ஒரு நபராக இயேசு பாடுகளை சகித்தார். எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள். காரணம் அவர் ஊழியத்திலே தலைமைத்துவமான பணியிலே நின்றார். அவருக்கு தோள் கொடுத்து நின்றவர்களெல்லாம் அவருக்கு ஆபத்து வந்த போது அவரை விட்டு ஓடிப்போனார்கள். பாடுகளை அவர் மாத்திரமே சகித்தார். நன்மைகளை எல்லாரும் சேர்ந்து அனுபவித்தார்கள். மகிமையை எல்லாரும் பங்கு போட்டு கொண்டார்கள். இயேசுவோடு கூட இருக்கிற சீஷர்களுக்கு ஒரு பெரிய கனவு இருந்தது. உடன் ஊழியர்களாய் இருப்பதினாலே பெரிய மகிமை இருந்தது. இவர்கள் இயேசுவின் சீஷர்கள் இவர்கள் இயேசுவோடு கூட இருப்பவர்கள்இயேசுவை பார்க்க வேண்டுமென்றால் இவர்களை சந்தித்தால் போதும் என்கிற காரியமாய் இருந்தது. ஆனால் பாடுகளை இயேசு மாத்திரமே சகித்தார். வேதனைகளை இயேசு மாத்திரமே சகித்தார். சிலுவைக்கு போவதற்கு முன்பாக இயேசு கிறிஸ்துவினுடைய இருதயம் வேதனையினாலே நிரப்பப்பட்டதாய் இருந்தது. இயேசுகிறிஸ்துவினுடைய இருதயத்தை துக்கம் அழுத்தியது. என்னவெல்லாம் சம்பவிக்கும் என்பதை ஆண்டவர் முன்பே அறிந்திருந்தார்.

இயேசுவினுடைய வாழ்க்கையிலே சிலுவைத் தண்டனை என்பது நினையாத நேரத்திலே நடந்தது அல்ல. இயேசு இந்த பூமியிலே பிறக்கும் போதே அவர் மரிப்பதை குறித்து

அறிந்திருந்தார். நாட்களை எண்ணிக்கொண்டே இருந்தார். ஆகவே அவருக்கு எதிராய் நின்றவர்களைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார் இன்னும் மூன்று நாட்கள் இருக்கிறது. மூன்று நாட்களும் பிசாசுகளைத் துரத்தி மூன்றாம் நாளிலே நிறைவடைவேன். அதற்கு முன்னாக என்னை ஒருவரும் தொடுவது இல்லை. பிடித்துக்கொண்டு போவதும் இல்லை என்பதாய் அந்த நாளை வேளையை சரியாக அறிந்திருந்தார். கெத்செமனே தோட்டத்திற்குள்ளே போகும் போது இயேசு பதினொரு பேரை அழைத்துக்கொண்டுபோகிறார். அங்கேசாப்பிட்டஇடத்திலிருந்து ஜெபிக்கிற இடத்திற்கு வருவதற்கு முன்பதாக ஒருவன் இயேசுவை விட்டு வெளியே போனான். துரோகத்தின் நிமித்தமாக இயேசுவின் இருதயம் வேதனையினாலே நிரம்பியிருந்தது.

யூதாசைக் குறித்து ஆண்டவர் அவன் பிறப்பதைப் பார்க்கிலும் பிறவாமலிருந்திருக்கலாம் என்று சொல்லுகிறார். காரணம் அவன் துரோகம் செய்ததை நாம் பார்க்கிறோம். யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுக்காவிட்டாலும் இயேசு உங்களுக்காக எனக்காக சிலுவைக்கு நிச்சயமாகவே போவார். யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்காவிட்டாலும் பிரதான ஆசாரியார் கூட்டத்தார் இயேசுவை எப்படியாகிலும் கைது செய்வார்கள்.

காரணம் இது பரலோகத்தின் தேவனுடைய திட்டமாய் இருக்கிறது. ஆனால் இயேசுவோடு கூடவே இருந்த ஒரு சீஷன் அவருக்கு விரோதமாய் அவருடைய ஜீவனுக்கு விரோதமாய் எழும்பி நின்றதை நாம் பார்க்க முடிகிறது. தன்னோடு கூட ஊழியம் செய்த உடன் ஊழியக்காரன் நிமித்தமாக உண்டான துரோகத்தை ஆண்டவர் இருதயத்திலே சுமந்தார். கெத்செமனே தோட்டத்திலே ஆண்டவர்


WANTED

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய
வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 9486588270,9486919522.

*ஜெபித்துக்கொண்டிருக்கும் போது உதவியாக இணைந்து ஜெபிக்க மூன்றுபேரை அழைத்துக்கொண்டு போனார். அவர்கள் மத்தியில் ஆண்டவர் தன்னுடைய இருதயத்தை திறந்து பேச ஆரம்பித்தார். பேதுரு, யோவான், யாக்கோபு எனக்கு இன்ன இன்னவிதமாய் நடக்கும். இந்த பாடுகளையெல்லாம் நான் சகிக்க வேண்டும் அதனால் நீங்கள் என்னோடு கூட இணைந்திருந்து எனக்காக ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னார். காரணம் இயேசு மாம்சத்திலிருந்தார். நம்முடைய சரீரத்தில் எப்படி வலிகள், வேதனைகள் வருமோ அப்படியே அவருக்கும் வந்தது. அவர் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராக இருந்தார். ஆகவே சிலுவைக்கு போவதற்கு முன்பாக அதை நினைத்து அவர் துக்கித்தார். இன்னும் சொல்லப்போனால் மாம்சத்திலே பயந்தார். திகிலடைந்தார் வியாகுலப்பட்டார். எனக்காக ஜெபம் பண்ணுங்கள். நான் இதை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும். இந்த சிலுவைக்குச் சென்று நான் என் ஜனத்திற்காக இரத்தத்தை ஊற்ற வேண்டும். சிலுவையிலே நான் மரிக்க வேண்டும். ஆகவே இந்த தேவனுடைய திட்டம் நிறைவேற எனக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள் என்றார். ஆனால் அவர்கள் ஜெபிக்கவில்லை. ஜெபிப்பார்கள் என்று அழைத்துகொண்டு போன சீஷர்களும் அங்கே உறங்கி வழிந்தார்கள். அது ஊழியத்திலே ஒரு தலைவனுக்கு தான் தெரியும்.*

**இவ்வளவு பெரிய கனமான ஊழியத்தை ஆண்டவரிடத்திலே பெற்றுக்கொண்ட நான் சில நேரங்களில் ஜெப உதவியே இல்லாதபடிக்கு தடுமாறுகிற காலமும் உண்டு. ஜெபிப்பதற்கே ஆளில்லாத சூழ்நிலை இருக்கும். வேதனைப்படுகிற காலத்திலே அதனை பகிர்ந்து கொள்ளக் கூட ஆள் இருக்கமாட்டார்கள். வெற்றிக்களிப்புக்கு நிறைய பேர் கூடியிருப்பார்கள். ஆனால் பாடுகளை துக்கங்களை வேதனைகளை நாம் சந்திக்கும் போது நாம் மாத்திரந்தான் சந்திப்போம். அப்படிப்பட்ட பாடுகளெல்லாம் ஊழியத்திலே வரும் நாட்களிலே ஆண்டவரே நான் அனாதையாய் இருக்கிறேனே என் வேதனையை பகிர்ந்து கொள்ள கூட ஆள் இல்லையே என்று நிறைய நாட்கள் அழுதிருக்கிறேன். என்னிடத்தில் வந்து என்னவென்று விசாரிக்க ஆள் இல்லையே என்று நான் கலங்கும் போது அந்நாட்களில் ஆண்டவர் எனக்கு கொடுத்த ஆறுதல் யார் உனக்கு இல்லாவிட்டாலும் உன்னை அழைத்து அனுப்பின ஆண்டவராகிய நான் உன்னோடு கூட இருப்பேன் என்று தேற்றினார். அவர் தான் கடைசி வரைக்கும் வருவார். கூட யாருமே வரப்போவது இல்லை. இரத்த உறவுகளோ பெற்ற பிள்ளைகளோ**

**யாரும் நம்மோடு வரமுடியாது. நம்மோடு கடைசி வரைக்கும் வரக்கூடிய ஒருவர் ஆண்டவர் இயேசு.**

அதைப்போலத்தான் இயேசு கெத்செமனே தோட்டத்திலே தனித்து போராடுகிறார். ஜெப உதவிக்காக பிரயாசப்படுகிறார். ஆனால் அவர் வந்து பார்க்கிற நேரமெல்லாம் சீஷர்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். காரணம் வேதனைகளை அவர்கள் சந்திக்கவில்லை. இயேசுதான் சந்திக்கப் போகிறார். இருதயத்திலே முழுவதும் நொறுக்கப்பட்ட இயேசு இருதயத்திலே கசக்கி பிழியப்பட்ட ஆண்டவர். சிலுவையிலே சரீரத்தை நசுக்க ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆனால் அந்த சிலுவையை சந்திப்பதற்கு முன்பாக இருதயத்திலே ஆண்டவர் கசக்கி பிழியப்பட்டார். தனிமையிலே போராடினார் வேதனைப்பட்டு அழுதார். இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும். ஏன்? சிலுவைத்தண்டனை என்பது உலகத்திலேயே மிகவும் ஒரு கொடிய மரணதண்டனை. அணுஅணுவாக மரிக்கக் கூடிய வேதனையின் உச்சத்திற்கு போய் மரிக்கக் கூடிய ஒரு தண்டனையென்றால் அது சிலுவைத் தண்டனை தான். அந்த தண்டனை இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது. அந்த தண்டனை வழியாக இயேசு பிதாவினால் வழிநடத்தப்பட்டார்.

பிரியமானவர்களே, இந்த சிலுவைத் தண்டனை முறையை முதலாவது ஏற்படுத்தியவர்கள் பெர்சியர்கள். ஆனால் அதை உறுதியாய் பிடித்துக்கொண்டு வைராக்கியம் காட்டியவர்கள் ரோமானியர்கள். ரோமர்களுக்கென்று ஒரு தனித்துவம் உண்டு ரோமானியர்கள் தங்களைச் சார்ந்தவர்களைத் தவிர அவர்களுடைய ஆட்சி பீடம் எங்கெல்லாம் இருக்கிறதோ எங்கே அவருடைய ஆளுகைக்கு கீழே இருக்கிறார்களோ அந்த தேசத்திலே பாவம் செய்தவர்களுக்கு கொடுக்கக் கூடிய தண்டனை சிலுவைத் தண்டனைதான். ரோம அரசு ரோமர்களுக்கு அந்த தண்டனை வழங்காது. ஆனால் அந்நியர்களுக்குதான் அந்த தண்டனையை கொடுத்திருக்கிறார்கள். அதிலும் இயேசு இன்னும் ஒரு சில படி மேலே போய் அந்த சிலுவைத் தண்டனையை அனுபவித்தார். அந்த கொடிய வேதனையை அவர் சந்தித்தார். இயேசு ஒரு இரவுக்குள்ளாக ஏழு முறை விசாரிக்கப்பட்ட ஒரு குற்றவாளியாய் இருந்தார். நமக்காக விசாரிக்கப்பட்டார். இந்த உலகத்திலே எந்த ஒரு குற்றவாளியையும் ஏழு முறை நீதிமன்றத்தில் போய் நிறுத்தவும் இல்லை. ஏழு முறை விசாரிக்கவும் இல்லை. ஏழு முறை விசாரிக்கப்பட்ட

ஒரு குற்றவாளி ஆண்டவர் தான். அந்த தீர்ப்பு நாளிலே யாரெல்லாம் அவரிடத்திலே நன்மை பெற்றார்களோ அவர்களெல்லாம் அவருக்கு விரோதமாக கோஷமிட்டார்கள். நன்மைக்கு தீமையை கைமாறாக செய்தார்கள். இயேசு அவற்றையெல்லாம் பார்த்தார். பிலாத்துவினுடைய அரண்மனை முற்றத்திலே அவர் கட்டப்பட்டவராய் நிற்கும்போது அதை பார்க்கிறார். அப்படி கொடிய வேதனையை அவர் சந்தித்தார். சிலுவைத் தண்டனை இயேசுவுக்கு நியமிக்கப்பட்ட போது இயேசுவை பாவிகள் கையிலே பிதா ஒப்புக்கொடுத்தார். அங்கே நடந்த நிகழ்வு என்ன? சிலுவைத் தண்டனைக்கு போகும் முன்பாக முப்பத்தொன்பது அடிகள் இயேசு சரீரத்திலே வாங்கும்படியாக பிலாத்து ஒப்புக்கொடுத்தான். அப்படிப்பட்ட தண்டனை நியமிக்கப்பட்ட மனிதர்களை கொண்டு போய் முதலாவது வஸ்திரத்தை களைந்தெடுப்பார்கள். ஏதாவது ஒரு தூணிலே கட்டி வைப்பார்கள். பிலாத்துவினுயை அரண்மனைக்கு அருகிலே குதிரைகளை கட்டி வைக்கும் தூண்கள் இருந்தது. ஒன்றரை அடி குனிந்து நிற்கும்படியாக அந்த தூணிலே அவருடைய கைகளை விலங்கிட்டு அவருக்காக இரண்டு சவுக்குகளை நியமித்தார்கள்.


முதலூரில்

**எழுப்புதல் உபவாச ஜெபம்**

**நாள் : 04.05.2024**
**சனிக்கிழமை**
**நேரம்: காலை 10 மணி**

தேவ செய்தி:

**Dr.R. அன்புராஜன்**

**(Peace Health Centre, Tirunelveli)**

**சகோ. T. ஆசீர் ஞானராஜ்**

**இடம்: எழுப்புதல் கூடாரம், முதலூர்.**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!
தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!


அந்த சவுக்கின் காரியத்தை குறித்து ஆய்வு சொல்லுகிறது: அந்த நீளமான சாட்டையிலே பன்னிரெண்டு நீளமான வார்கள் இருந்தது. அந்த வாரின் முனைப்பகுதிகள் எல்லாம் இரும்பினால் ஆன கொக்கிகள் அதோடு கூட கட்டப்பட்டிருந்தது. இரண்டு போர்ச் சேவகர்கள் அடிக்கும்படியாக நியமிக்கப்பட்டார்கள். இரண்டு சவுக்கிலும் பன்னிரெண்டு கொக்கிகளோடு கூட அந்த சாட்டை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த சவுக்கை எடுத்து இயேசுவை அடித்து வேதனைப்படுத்தினார்கள். ஒவ்வொரு அடியும்

இயேசுவினுடைய சரீரத்தை கிழித்துக்கொண்டு வந்தது. சில நேரங்களில் அந்த தண்டனை நியமிக்கப்பட்ட குற்றவாளிகள் அடிக்கிற இடத்திலேயே மரித்து விடுவார்கள். சிலரை அடிக்கும் போது சரீரத்தின் உள்ளுறுப்புகளை கிழித்து சிதைந்து வெளியே வந்து விடுமாம். அப்படிப்பட்ட ஒரு கொடுமையான தண்டனையை இயேசு ஒரு பாவமும் செய்யாதிருந்தும் உங்களுக்காக எனக்காக அந்த வேதனையான தண்டனையை தன் மீது சுமந்தார். இயேசு என்னை இரட்சித்தார் என்று ஒரு வரியிலே சொல்லி விடுகிறோம் என் பாவத்தை மன்னித்தார். அதன்பின்னாக இயேசு கொடுத்த விலைக்கிரயத்தை சொல்லி மாளாது. இயேசு அப்படியாக அடித்து கிழிக்கப்பட்ட பின்பு அவருடைய சிரசிலே பினாக்கிரிஸ்டி என்ற கொடிய முள் கிரீடம் வைக்கப்பட்டது. மனிதனுடைய சரீரத்திலே தலைப்பகுதியிலே ஏராளமான நரம்புகள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அந்த நரம்பு மண்டலத்திலே ஒரு சிறிய நரம்பு அறுந்து இரத்தக்கசிவு உண்டாகும்போது மருத்துவ ரீதியாக ஒரு மனிதனின் சரீரத்திலே பக்கவாதம் வந்து விடுகிறது. ஒரு கை கால் செயலிழந்து வாய் ஒரு பக்கமாக திரும்பி பேச முடியாதபடிக்கு அவர்கள் நினைவாற்றலை இழந்து சிலர் மரித்தும் விடுகிறார்கள். ஆனால் இயேசுவினுடைய தலைப்பகுதியிலே ஏராளமான முள்கள் உள்ளே ஆழமாய் குத்தி இரத்தத்தை கொண்டு வந்தது. தலைப்பகுதி முழுவதும் இரத்தத்தால் நிறைந்திருந்தது. கெத்செமனே தோட்டத்திலே அவர் ஜெபிக்கும் போது இரத்தத்தை சிந்தினார். பிலாத்துவினுடைய அரண்மனையிலே குதிரை கட்டக் கூடிய இடத்திலே இரத்தத்தை சிந்தினார். போர்ச்சேவகர்கள் அவரை பிடித்து அவர் மீது முள்கிரீடத்தை வைத்து கோலினாலே இருநூறு அடிகள் அடித்து அவரை வேதனைப்படுத்தின போது அங்கே இயேசு உங்களுக்காக எனக்காக இரத்தத்தை சிந்தினார். இப்பொழுது இயேசுவின் மீது கனமான சிலுவை வைக்கப்பட்டது. பொதுவாக சிலுவைத் தண்டனையை பெறக் கூடிய மனிதர்கள் என்ன பாவம் செய்தார்களோ அந்த பாவத்தை எழுதி அந்த சிலுவையின் மீதுவைத்து அவர்கள் கழுத்தின் மீது வைப்பது வழக்கம். ஆனால் இயேசுவின் மீது சுமத்தும்படியான ஒரு குற்றம் அங்கே இல்லவே இல்லை. அதினால் அவர் சிலுவையை சுமந்து கொண்டு போகும் போது அப்படிப்பட்ட ஒரு காரியம் அங்கே பொருத்தப்படவில்லை. இயேசு தான் அறையப்படக் கூடிய அந்த முழு நீள சிலுவையை சுமந்து கொண்டு பிலாத்துவினுடைய அரண்மனையிடத்திலிருந்து

*இரண்டரை கிலோமீட்டர் சிலுவையை சுமந்து கொண்டு போனார். அதினுடைய பாரம் ஆய்வின்படி நூற்றைம்பது கிலோ இருக்கும் என்று சொல்லுகிறது. ஒரு சிறிய தண்ணீர் குடத்தை தூக்குவதற்கு நாம் எவ்வளவோ பாடுகள் படுகிறோம். பிரயாணமாய் போகும் போது எதிர்பாராதவிதமாக ஒரு பாரத்தை சுமக்க வேண்டியது இருந்தால் எவ்வளவோ நெருக்கப்படுகிறோம். பாரச்சுமையை சுமந்து வேலை செய்கிறவர்கள் ஒரு சிறிய பாரத்தை சுமக்க எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். ஆனால் இயேசு முழு உலகத்தின் பாவ சிலுவையை நம்முடைய பாவ பாரத்தை இயேசு சிலுவையாக அவர் தன் தோளின் மீது சுமந்தார். வழிவழியாக நடந்த நிகழ்வென்ன? பிரதான ஆசாரியனுடைய ஸ்தலத்திலே சனகெரிப் நீதிமன்றத்திலே அவரை விசாரிக்கும் நேரத்திலிருந்து அவர் பலமுறை காறி உமிழ்ந்து துப்பப்பட்டார். தேவனாலே ஏற்படுத்தப்பட்ட மனிதன் உருவாக்கின தேவனை காறி உமிழ்ந்து துப்பும்போது நீதிபரர் பரிசுத்தர் எவ்வளவேனும் பாவம் இல்லாதவர் என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் எவன் சொல்லக் கூடும் என்று கேட்ட ஆண்டவர் உங்களுக்காக எனக்காக அந்த அவமானத்தை அவர் சகித்தார்.*

**ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக நான் ஊழியத்தை முடித்து சென்னையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தேன். அப்போது நான் வந்து கொண்டிருந்த பேருந்தில் மேலே படுக்கும் வசதி கொண்ட இருக்கையும் கீழே உட்கார்ந்து பயணிப்பதற்கான இருக்கையும் இருந்தது. நான் கீழே இருக்கையில் உட்கார்ந்து பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தேன். பிரயாணத்தை துவங்கி இரண்டு மணி நேரம் இருக்கும். திடீரென்று என் மீது தண்ணீர் வந்து விழுந்தது. என்ன மேலே இருந்து தண்ணீர் வருகிறது. யார் தண்ணீர் ஊற்றியது என்று பார்ப்பதற்காக வேகமாக எழும்பி அந்த படுக்கையின் துணியை விலக்கி பார்த்த போது பத்து வயதுள்ள ஒரு சிறுபிள்ளை சிறுநீர் கழித்துக்கொண்டிருக்கிறாள். கொஞ்சம் நனைந்திருந்தால் பரவாயில்லை. என் தலையிலிருந்து சட்டை முழுவதும் நனைந்துவிட்டது. மிகவும் நாற்றமெடுத்தது. என்னால் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு பக்கம் கோபம் எழும்புகிறது. அந்த பிள்ளை தனது தாயின் மீது படுத்திருக்கிறது. பேருந்து ஓட்டுநர் நடத்துனரிடம் போய் பிரச்சனையை சொல்ல வேண்டுமென்று ஆவேசம் வந்தது. ஆனால் என்ன செய்வதென்று யோசித்த போது ஆண்டவர் உனக்காக நான் காறி உமிழப்பட்டேன் காறி துப்பப்பட்டேன் என்று சொன்னார். என் படபடப்பு நீங்கி அந்த மகள் மேல் பரிதாபம் பொங்கியது.நான் பொறுமையோடு அமர்ந்து கொண்டேன்.**

*சிலுவையிலே இயேசு தொங்கிய போது அருகிலே இரண்டு கள்ளர்கள் தொங்கினார்கள்.*

அதிலே ஒருவன் நாமோ நம்முடைய செய்கைக்கு தக்கதாக தண்டிக்கப்படுகிறோம் என்றான். நாம் பாவிகள் தான். தேவனுக்கு முன்பாக நாம் குறைவுள்ளவர்கள். ஆனால் ஒரு குறைவுமில்லாமல் ஒரு பழுதுமில்லாமல் நமக்காக அவர் அத்தனை வேதனையையும் சகித்தார். பலமுறை காறி உமிழ்ந்தார்கள். இரண்டரை கிலோமீட்டர் இயேசு சிலுவையை இழுத்துக்கொண்டு கொல்கொதாவை நோக்கி போகும்முன்னே பலமுறை காறி உமிழ்ந்து அவருடைய முகம் முழுவதும் துர்நாற்றம் வீசத்தக்கதாக உமிழ்ந்தார்கள். பாதரட்சையை தூக்கி எறிந்தார்கள். கழிவுப்பொருட்களை தூக்கி இயேசுவின் மீது எறிந்தார்கள். கற்களை எறிந்தார்கள் அத்தனை வேதனைகளையும் இயேசு சகித்துக்கொண்டு தான் பலமுறை பாரமான சிலுவையை தாங்க முடியாமல் கீழே விழுந்தார். எழுந்திருக்க முடியாதபடி தள்ளாடினார். ஏற்கனவே சரீரம் அடிபட்டு ஏராளமான வேதனை. ஆனால் அப்படிப்பட்ட வேதனையிலும் இயேசு கடந்து போனார். இயேசு கெத்செமனே தோட்டத்தில் பிடிக்கப்பட்ட நேரம் துவங்கி சிலுவையிலே அவர் ஜீவன் விடுமட்டுமாக பதினைந்து மணி நேரம் இயேசு தண்ணீரே குடிக்காமல் இருந்தார். அவ்வளவாய் நம்முடைய பாடுகளை அவர் சகித்தார். பாரமான சிலுவையை இழுத்துக்கொண்டு கொல்கொதா மலைக்கு போகும் போது திரளான ஜனங்கள் ஸ்திரீகளும், புருஷர்களும் கூடி வந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருஇராஜாதிஇராஜாஅவருடைய வஸ்திரத்தை உரிந்து அவரை கால் நிர்வாணமாக்கி அவரை அவமானப்படுத்தினார்கள். எல்லோருக்கும் முன்பாக ஒரு மகிமை நிறைந்த ஆண்டவர் நம்முடைய பாவத்திற்காக நாம் சமுதாயத்திலே மற்றவருக்கு முன்பாக மகிமையாக கனத்தோடே இருக்கும்படியாக அவர் கனவீனப்பட்டார். அவர் வேதனையை சகித்தார்.

**கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஒரு சம்பவம். அப்போது நான் சிவகாசி பட்டணத்திலே இருந்தேன். நான் இருக்கிற இடத்தின் அருகிலே ஒரு பட்டாசு தொழிற்சாலை திடீரென்று விபத்துக்குள்ளாகி பயங்கரமாக வெடித்ததில் அப்படியே நெருப்பு பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது. ஜனக்கூட்டத்தார் ஓடிப்போய் பார்க்கிறார்கள். நானும் அங்கே பார்க்கும்படிக்கு போனேன். அந்த தொழிற்சாலையில் ஒரு அறைக்கு அடுத்ததாக மற்றொரு அறை நூறு அடி தூரத்திற்கு தள்ளி அமைந்திருக்கும். ஏனென்றால் ஒரு அறையில் வெடி வெடித்தால் அந்த நெருப்பு மற்ற அறைக்கும் பரவக்கூடாது மற்றவர்களாவது தப்பிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் நிர்ணயித்தபடியே அந்த பட்டாசு தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந்தது. ஒரு**

**பட்டாசு தொழிற்சாலை கிட்டத்தட்ட பத்து ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டிருக்கும். ஒரு அறையில் வெடித்த அந்த பட்டாசு நெருப்பு சிதறி போய் அருகில் இருந்த மற்றொரு அறையில் விழுந்தது. அந்த நெருப்பு விழுவதற்கு முன்பாக அந்த அறைக்குள்ளிருந்த ஏழு பெண்கள் அதிகமாக கூச்சலிடுகிறார்கள். நெருப்பு விழுந்து பற்ற ஆரம்பிக்கிறது. அந்த அறைக்குள்ளிருந்த அந்த வெடிகள் வெடித்து சிதறி அதில் மூன்று பெண்கள் மீது நெருப்பு அவர்கள் வஸ்திரத்தில் பட்டது. வேகமாக அவர்கள் துணிகளை கிழித்து போடுகிறார்கள். துணியை கிழித்து போட்டு விட்டு வேகமாக ஓடி குறிப்பிட்ட தூரத்திற்கு வந்த போது ஜனங்களெல்லாரும் அவர்களை சுற்றி நிற்பதைப் பார்த்து நிர்வாணமாய் ஓடி வந்த அந்த மூன்று இளம் பெண்கள் என்ன செய்வதென்று தெரியாமல் மறுபடியும் ஓடிப்போய் அதே நெருப்பிற்குள் விழுந்து மரித்ததை நான் என் கண்களால் பார்த்தேன். எவ்வளவு பெரிய துயரம் பாருங்கள்!**

*மனிதன் தன்னுடைய நிர்வாணத்தை காண்பிக்க விரும்புவதில்லை. ஆனால் தெய்வம் நமக்காக கால்நிர்வாணமாய் தொங்கினார். அத்தனை அவமானத்தையும் சகித்தார். எந்த ஜனங்களுக்கு முன்பாக அவர் மகிமையாய் நின்றாரோ, அற்புத அடையாளங்களை செய்தாரோ அந்த ஜனங்களுக்கு முன்பாகவே அவர் அவமானப்பட்டு நின்றார். யாருக்காக? எதற்காக? நாம் பாவத்திலே சிக்குண்டு அவமானப்படக்கூடாது என்பதற்காக நம்மை மீட்கும்பொருட்டாக நாம் தண்டிக்கப்படும் இடத்திலே அவர் தன்னை ஒப்புக்கொடுத்து நம்மை பாதுகாத்தார். நம்மை கனப்படுத்தினார். நமக்கு இந்த மகிமையை தந்தார். எத்தனை பெரிய விலையேறப்பெற்ற இரட்சிப்பைநமக்குதந்திருக்கிறார்! அந்த கொல்கொதா மேட்டிலே சிலுவைத் தண்டனை கொடுக்கக் கூடிய இடத்திலே சாதாரண நாளிலே போய் பார்த்தால் எங்கு பார்த்தாலும் பாறைகள் மீது இரத்தம் சிதறி கிடக்குமாம். அதிகமாக ஆடு மாடுகளை வெட்டி விற்பனை செய்யக் கூடிய கறி கடைக்கு முன்பாக அல்லது அதற்கு அருகிலே எப்படி இரத்தமும் மண்ணும் ஒன்றாய் சேர்ந்து இரத்த நிறமாய் இருக்குமோ அப்படித்தான் அந்த கொல்கொதா மேட்டிலே முழுவதும் இரத்தம் நிறைந்து இருக்கும். அங்கே விழக் கூடிய மாமிசத்தை உண்ணும்படியாக ஏராளமான எலிகளும் பிணந்தின்னி கழுகுகளும் வசிக்குமென்று ஆய்வு சொல்லுகிறது. ஆனால் அந்த இடத்திலே பாவிகள் தண்டிக்கப்பட்டு அவர்கள் சிந்தின இரத்தத்திற்கு மேலே பரிசுத்தமுள்ள ஒரு இரத்தம் சிந்தப்படும்படியாக இயேசு அங்கே கொடிய வேதனையின் மத்தியிலே சிலுவையிலே*

அறையப்பட்டவராய் நமக்காக இரத்தத்தை ஊற்றினார். ஒரு சொட்டு இரத்தமில்லாமல் சிலுவையிலே ஆண்டவர் நமக்காக சிந்தினார். சிலுவைத் தண்டனை அனுபவிக்கக் கூடிய மனிதர்களால் மூச்சை இழுத்து விட முடியாதாம். மூச்சை இழுத்து விடவேண்டுமானால் கால்களின் மத்தியிலே அறையப்பட்ட அந்த ஆணிகளில் அப்படியே சரீரத்தை தூக்கி தான் மூச்சை விட முடியுமாம் அப்படியில்லையென்றால் மூச்சு விட முடியாதென்று முன்நாட்களில் ஆய்வுகள் எழுதப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கொடிய தண்டனையை இயேசு உங்களுக்காக எனக்காக ஏற்றுக்கொண்டார். ஆதாம் துவங்கி மனுக்குலத்தை ஆண்ட கீழ்ப்படியாமையின் பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக அதைத் தொடர்ந்து வரக் கூடிய சாபத்திலிருந்தும் நம்மை விடுவிக்கும்படியாக இயேசு சாபமானார். **மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதப்பட்டபடியே கிறிஸ்து நமக்காக சாபமானார். – கலா. 3:13** நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை விடுவித்தார். நாம் பாவங்களுக்கு செத்து நீதிக்கு பிழைக்கும்படிக்கு **அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார். – மத்தேயு 8:17** நோய்களையெல்லாம் அவர் சுமந்து கொண்டு நமக்கு அற்புத சுகத்தை கொடுத்திருக்கிறார். அதினால் தான் நிறைய சாட்சிகள் சொல்லுகிறோம். இதை எழுதுகிற நான் கூட தற்கொலைக்கு நேராக போகும் போது தான் ஆண்டவரால் தொடப்பட்டு அற்புதமான சுகத்தையும் விலையேறப்பெற்ற இரட்சிப்பையும்பெற்றுக்கொண்டு இன்றைக்கு இரட்சிப்பை குறித்து பிரசங்கிக்கிறவனாக கர்த்தராலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன். தரித்திரத்திலிருந்து நம்மை உயர்த்தும்படியாக இயேசு தொங்கினார். **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. – 2கொரி 8:9** எனவே, இந்த இரட்சிப்பு சாதாரணமானதல்ல.

சிலர் இந்த இரட்சிப்பை விட்டு விலகி பாவம் செய்து மறுபடியும் குமாரனை அவமானப்படுத்தி காலின் கீழ் போட்டு மிதிக்கக் கூடிய நிலைகள் இருக்குமானால் இன்று நாம் உணர்வடைந்து இயேசுவின் பக்கமாய் திரும்புவோம். உண்மையாய் அவரை நேசிப்போம். கிருபையை பற்றி கொள்வோம். அவருடைய வருகைக்காய் ஆயத்தமாவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம்
### பொய்ப்பாரிகுடா பணித்தளம்

**ஜெபக்குறிப்புகள்:**

- காசிராம் என்பவரது தகப்பனார் (70 வயது) மூட்டு வீங்கி நடக்கமுடியாமல் உள்ளார். இவரது சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சன்மத்தி என்ற சகோதரி (30 வயது) மனநிலை பாதிக்கப்பட்டு உள்ளார்கள். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- ராமோ கோரா கால் மெலிந்து போய் உள்ளது. (வலது பக்கம்) பக்கவாதம் போல் உள்ளது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- பிதிர்ணு என்பவரின் தாய் இடுப்புவலி மற்றும் பல நோய்களால் கஷ்டப்படுகிறார். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- உஷா என்ற சகோதரி திருமணமாகி நான்கு ஆண்டுகளாகியும் குழந்தை இல்லை. இவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியம் கொடுக்க ஜெபியுங்கள்.
- குன்னு என்ற சகோதரிக்கு அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு வருகிறாள். விடுதலைக்காக ஜெபியுங்கள்.
- சாமுவேல் தன்பூல் என்ற சகோதரனுடைய மகள் அதிகமான இரத்தப்போக்கினால் கஷ்டப்படுகிறார். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- பெர்மோகோரா (28 வயது) இரத்த சோகை நோய் உள்ளது. அடிக்கடி இரத்தம் ஏற்றினாலும் இரத்த அளவு குறைந்து விடுகிறது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- பிரத்திமா பத்ரா என்ற சகோதரியின் கணவன் தன பத்ரா அதிகமாக குடிக்கிறார். எனவே குடும்பத்தில் அடிக்கடி சண்டை ஏற்படுகிறது. விடுதலைக்காக ஜெபியுங்கள்.

- ஜான்ஶ்ரீ ஹரிஜன் என்பவரும் அதிகமாக குடிக்கிறார். மதுபான பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.
- சந்திரம்மா ஹரிஜன் என்ற சகோதரி வீட்டில் நிலத்திற்காக சண்டைபோடுகிறார்கள். சமாதானமான முறையில் இது முடிய ஜெபியுங்கள்.
- பாக்ரத்தி பாக் என்பவர் வீட்டிலும் நிலம் பிரிப்பதில் சண்டை ஏற்படுகிறது. சமாதானமான முறையில் முடிய ஜெபியுங்கள்.
- மங்குரி ஹரிஜன் என்பவருக்கு சுகர் குறைய ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்:

- பல்லிகுடா, பாம்புனி, பூஜாரிபுட், பயாகுடா, பொத்தாபுட், டெல்லிகுடா, கதபாகுடா, பத்திபெட்டா, பாத்ராபுட், கெந்துகுடா, ரானிபெட்டா, மரவாகுடா, சொமாரிகுடா, சந்தோஷ்பூர், நுவாகுடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தேன். இக்கிராமங்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## நபரங்கபூர் மாவட்டம் உமர்கோட் பணித்தளம்

### ஜெபக்குறிப்புகள்:

- சொபாமா ஹரிஜன் என்ற சகோதரி அடிக்கடி இதய வலியினால் கஷ்டப்படுகிறார்கள். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- மொரியம் ஹரிஜன் என்ற சகோதரியின் மகள் 1½ வயதாகிறது. இன்னும் நடக்கவில்லை. இக்குழந்தையின் ஊட்டசத்து குறைபாடுகள் நீங்கி விரைவில் நடக்கும்படி ஜெபியுங்கள்.
- சீமாங்சளி ஹரிஜன் கால்கள் வலியினால் கஷ்டப்படுகிறான். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- ஜெயராம் ஹரிஜன் என்பவர்கள் தொடர்ந்து ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.
- ராத்திமா ஹரிஜன் என்ற தாயார் கணவரிடம் சண்டை போட்டு விட்டு போய் விட்டார்கள். இவர்களது குடும்பத்தில் சமாதானம் ஏற்பட ஜெபியுங்கள்.
- பருணோ ஹரிஜன் என்பவர் ஆராதனைக்கு வருவார். ஆனால் மாடுமேய்க்க போகவேண்டும் என்று கூறி சிறிது நேரத்திலேயே எழுந்து போய்விடுவார். இவருக்காக ஜெபியுங்கள்.
- சுத்து சுனா என்பவர் ஞாயிறு ஆராதனைக்கு தொடர்ச்சியாக வருவதில்லை. இவருக்காக ஜெபியுங்கள்.
- பத்மா ஹரிஜன் என்ற விதவை சகோதரி ஜெபத்திற்கு வருவதற்கு குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் இவர்களது பிரச்சனை மாற ஜெபியுங்கள்.
- சுறுமணி ஹரிஜன் எனபவரது கணவன் மற்றும் பிள்ளைகள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- பிணா ஹரிஜன் என்ற சகோதரியின் குடும்பத்தினர் குங்குமம் வைக்கச் சொல்லி கட்டாயப்படுத்துகின்றனர்.

இப்படிப்பட்ட காரியங்களில் வற்புறுத்தாமல் இருக்கும்படி ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்

- பந்திலிகுடா பொட்டுகுடா செம்லா மெண்டாபெடா பொட்பாசினி ஆதிவாசி சன்பாசினி ஜீவ்னாகுடா பொலத்கொரா சுனாபெடா நாயக்குடா UV.11 UV.10 டொல்டொல்லி பொர்மாஹண்டி பட்டியாசில் லொக்டிப்டனர் பர்ணிபுட் தொப்பாதொரூர் பல்லிபட்டா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## மல்கன்கிரி மாவட்டம் சித்ரகொண்டா பணித்தளம்

**துதியுங்கள்:**

- சொனா கிலோ என்பவர் டிபி வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தார். கடந்த மாதம் அறிக்கையில் ஜெபிக்கச் சொல்லியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகம் கொடுத்தார் தேவனுக்கே மகிமை!

**ஜெபியுங்கள்:**

- பொர்சு என்ற சிறுவன் புதிதாக ஆராதனைக்கு வருகிறான். இவனது பெற்றோரும் புதிதாக ஆராதனைக்கு வருகிறோம் என்று கூறுகிறார்கள். இவர்களது குடும்பத்தில் பகலில் வயலில் மேய்ந்து வரும் ஆடு, மாடுகள் வீட்டிற்கு வந்தவுடன் ஒரு நாள் இரண்டு நாளைக்குள் ஒன்றாக மரித்து விடுகிறது. இதனால் ஜெபியுங்கள்.
- அர்ஜுன் என்ற சகோதரன் திருமணமாகி எட்டு வருடம் ஆகிறது. குழந்தை இல்லை. இதனால், குடும்பத்தில் சண்டை ஏற்படுகிறது. கடந்த இரண்டு மாதம் கர்ப்பம் தங்கியது. ஆனால் அது கருசிதைவு ஆகிவிட்டது. இவர்களுக்கு கர்த்தர் குழந்தை பாக்கியம் அருள ஜெபியுங்கள்.
- ரெக்காபள்ளி கிராமத்தினர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- ரங்காபதி என்ற சகோதரி திருமணமாகி சில மாதங்களில் மனநிலை பாதிக்கப்பட்டு தாய் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- அஞ்சனா என்ற சகோதரிக்காக ஜெபியுங்கள். கை கால்கள் வலியினால் அதிகமாக கஷ்டப்படுகிறார்கள். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- குட்னிபதர் கிராமத்தில் ராமாபங்கி என்ற சகோதரிக்கு எதிராக பில்லிசூனியம் செய்துள்ளனர். இதனால் கடந்த எட்டு மாதமாக மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார்கள். விடுதலைக்காக ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்:

- கொட்டியாகுடா, புலாஜல்மா, கோயிடிபந்தி, சந்தியாசிகுடா, ஜண்டாகுடா, டும்ரிபல்லி, குட்னிபதர், தராபடா, சிந்திபாடி, கெந்துகுடா, பான்பதர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். கோயிடிபந்தி கிராமத்தில் அதிக எதிர்ப்பு உள்ளது. இக்கிராம இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. சென்னையில் இருந்து மதுரைக்கு பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயிலில் கடத்தி வந்த ரூ.180 கோடி போதைப் பொருளை அதிகாரிகள் அதிரடியாக கைப்பற்றி அதனை கடத்தி வந்தவரையும் கைது செய்தனர்.
2. தூத்துக்குடியில் நடந்த அரசு விழாவில் ரூ.17 ஆயிரம் கோடியில் பல்வேறு திட்டப்பணிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதில் ரூ.986 கோடி மதிப்பில் குலசேகரன்பட்டினத்தில் அமைய உள்ள ராக்கெட் ஏவுதளத்துக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.
3. பாகிஸ்தானில் பெய்த கனமழை காரணமாக 21 குழந்தைகள் உள்பட 36 பேர் பலியாகினர். 700க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.
4. மணிப்பூரில் இனக்கலவரத்துக்கு வித்திட்ட சர்ச்சைக்குரிய உத்தரவை அந்த மாநில ஐகோட்டு திரும்பப் பெற்றுள்ளது.
5. இஸ்ரேலில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் இந்தியர் ஒருவர் பலியானார். அவர் கேரள மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM, CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஓசூர் | – 94869 07831 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.



மல்கன்கிரி மாவட்டம் சித்ரகோண்டா பணித்தளத்திற்கு அண்ணன் (T. ஆசீர் ஞானராஜ்) சென்றபோது சில கிராமங்களில் ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.



Registered Newspaper RNI No. TNTAM/2003/15637, Postal Registration No.: TTN/10/2024-2026.
WPP No.: TN/WPP – 192/SR/2024-2026
Date of publication on 10.03.2024. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

நம்பிக்கை TELEVISION

நம்பிக்கை தொலைக்காட்சியில்...

# வேதமே வெளிச்சம்

என்ற நிகழ்ச்சி ஒவ்வொரு வியாழக்கிழமையும்
காலை 7 மணி முதல் 7.30 மணி வரை ஒளிபரப்பு செய்யப்படுகிறது.
இந்நிகழ்ச்சியை காணத்தவறாதீர்கள்.
இதனை உங்கள் அருமையானவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

## மருதகுளத்தில்...

# லெந்து கால சிலுவை தியானக் கூட்டம்

**நாள்:**

**27.03.2024**
புதன்கிழமை
மாலை 7.15 மணிக்கு

**இடம்:**

பிஷப் சார்ஜென்ட் நினைவு
தூய திரித்துவ ஆலயம்,
மருதகுளம், திருநெல்வேலி.



**தேவ செய்தி:**

## சகோ. T. ஆசீர் ஞானராஜ்

**தொடர்புக்கு: 99654 61622**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**